**செய்தி வெளியீடு எண் : 1572** **நாள் : 12.09.2022**

**செய்தி வெளியீடு**

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான **மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்** ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க **பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு 15.09.2022, 17.09.2022** ஆகிய நாள்களில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

**பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் கல்லூரி மாணவர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும்**

1. முதல் பரிசு ரூ.5000/–
2. இரண்டாம் பரிசு ரூ.3000/–
3. மூன்றாம் பரிசு ரூ. 2000/– என்ற வகையில் வழங்கப்படும்.

மேலும் இப்போட்டியில் பங்கேற்கும் அரசுப் பள்ளி மாணவர்களிலிருந்து இருவர் மட்டும் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்புப் பரிசுத் தொகை ரூ.2000/– வீதம் தனியே வழங்கப்பெறும்.

பள்ளி மாணவர்களுக்கு

## பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் ஆகியோரின் பேச்சுப் போட்டி நாள் : 15.09.2022, 17.09.2022

தலைப்புகள்

| பேரறிஞர் அண்ணா பேச்சுப்போட்டி | தந்தை பெரியார் பேச்சுப்போட்டி |
|---|---|
| **1. தாய் மண்ணிற்குப் பெயர் சூட்டிய தனயன்**<br>**2. மாணவர்களுக்கு அண்ணா**<br>**3. அண்ணாவின் மேடைத்தமிழ்**<br>**4. அண்ணா வழியில் அயராது உயரும் !**<br>**5. அண்ணாவின் வாழ்விலே** | **1. பெண்ணடிமை தீருமட்டும்**<br>**2. தந்தைபெரியாரின் வாழ்க்கையிலே**<br>**3. தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள்**<br>**4. பெரியாரின் உலக நோக்கு** |

பள்ளிப்போட்டி நடைபெறும் இடம் நேரம் மு.ப 10.00 மணி

| வட சென்னை | தென் சென்னை | மத்திய சென்னை |
|---|---|---|
| அரசு உயர்நிலைப் பள்ளி<br>வில்லிவாக்கம்<br>சென்னை | அரசு மகளிர் மேல்நிப்பள்ளி<br>அசோக்நகர்<br>சென்னை–5. | செயகோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளி,<br>சைதாப்பேட்டை<br>சென்னை |

கல்லூரி மாணவர்களுக்கு

## பேரறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் ஆகியோரின் பேச்சுப் போட்டி நாள் : 15.09.2022, 17.09.2022

தலைப்புகள்

| பேரறிஞர் அண்ணா பேச்சுப்போட்டி | தந்தை பெரியார் பேச்சுப்போட்டி |
|---|---|
| **1. அண்ணாவும் தமிழக மறுமலர்ச்சியும்**<br><br>**2. அண்ணாவின் மனிதநேயம்**<br><br>**3. அண்ணாவின் தமிழ் வளம்**<br><br>**4. அண்ணாவும் தமிழ்ச்சமுதாயமும்**<br><br>**5. அண்ணாவின் அடிச்சுவட்டில்** | **1. பெண் ஏன் அடிமையானாள் ?**<br><br>**2. இனிவரும் உலகம்**<br><br>**3. சமுதாய விஞ்ஞானி பெரியார்**<br><br>**4. உலகச் சிந்தனையாளர்களும் பெரியாரும்**<br><br>**5. பெரியார் காண விரும்பிய சமூகநீதி**<br><br>**6. மூட நம்பிக்கை ஒழிப்பில் தந்தை பெரியார்** |

கல்லூரிப்போட்டி நடைபெறும் இடம் நேரம் மு.ப 10.00 மணி

| வட சென்னை | தென் சென்னை | மத்திய சென்னை |
|---|---|---|
| அம்பேத்கர் கலைக் கல்லூரி<br>வியாசர்பாடி,<br>சென்னை | இராணிமேரி கல்லூரி,<br>சென்னை–5. | பாரதி மகளிர் கலைக் கல்லூரி<br>பிராட்வே<br>சென்னை |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in